Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 24 2025

வெள்ளிக்கிழமை, 24 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 144 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## ரயில் இ-டிக்கெட் மோசடி: மூவர் கைது

அனைத்து ஒடிஸி ரயிலில் நடைபெற்ற இ-டிக்கெட் மோசடி தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற புகாரைத் தொடர்ந்து, குற்றப் புலனாய்வுத் துறை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, திருகோணமலை பகுதியில் உள்ள ரயில்வே துறையில் பணிபுரியும் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் 92 இ-டிக்கெட்டுகளுடன் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் புதன்கிழமை (22) கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

# “வெட்கம் இருந்தால் வெளியேற வேண்டும்”



முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வெட்கம் என்பதொன்று இருக்குமானால் அரச இல்லங்களிலிருந்து வெளியேற வேண்டும். ஆனால், இவர்களுக்கும் வெட்கமில்லை, இவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை என தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் பௌத்தாலோக்க மாவத்தை வீடு, 3128 மில்லியன் ரூபாய் பெறுமதியானது. 46 இலட்சம் ரூபாய் மாத வாடகை கொண்டது எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அனுரவுக்கும் மனைவிக்கும் பிணை



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, அவரது மனைவி மற்றும் பலர் உட்பட நான்கு பேரை தலா 2.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு பிணைப் பத்திரங்களில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

## “இனிமேல் நான் இப்படிதான் இருப்பேன்”



அரசாங்கத்திற்குத் தான் வழங்கும் ஆதரவை முற்றாக விலக்கிக்கொள்வதாகத் தெரிவித்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், இனி தான் உண்மையான எதிர்க்கட்சியினராக இருப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 64 நாட்கள் கடந்துள்ளன.

தொடர்ச்சி P2

## “7 இலட்சம் மாணவர்களுக்கு இலவச காலணி”



நாட்டில் சுமார் 250 இற்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகளின் அனைத்து மாணவர்களுக்கும் இந்த ஆண்டு இலவச காலணி வழங்கப்படும். இதற்கமைய சுமார் 7 இலட்சம் மாணவர்களுக்கு இவ்வாறு காலணிகள் வழங்கப்படும் என பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(23) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் அரச தரப்பு எம்.பியான ரவீந்திர பண்டார எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், பாடசாலைகளில் காணப்படும் மனித மற்றும் பௌதீக வள பற்றாக்குறைக்குக் கட்டம் கட்டமாகத் தீர்வு காண்பதற்குக் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு சமமான வளங்களைப் பகிர்ந்தளித்தால் பாடசாலைகளுக்கு இடையில் போட்டித்தன்மை ஏற்படாது.

தொடர்ச்சி P2

## “யார் கூறுவது பொய்”



நெல் தொடர்பில் அதிகாரிகள் கூறுவது பொய்யா அல்லது வர்த்தகர்கள் கூறுவது பொய்யா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். நெல் உற்பத்தி தொடர்பான தரவுகள் பிழையாக இருந்தால் தீர்மானங்களும் தவறானதாக அமையும் என அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியுமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பழங்குடியினருக்கு 3 மாதங்களில் தீர்வு



பழங்குடியின மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற சட்ட வரைவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும், பழங்குடியின மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான தற்போதைய சட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் (22) பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## சீருடையுடன் போதையில் இருந்த பொலிஸாருக்கு சிக்கல்

பாணந்துறை பகுதியில் பணியில் இருந்தபோது, குடிபோதையில் அங்குள்ள ஒரு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், மற்றவர் வேறு பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீதும் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட



பொலிஸ் அதிகாரி புத்திக மனதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “ஒழுக்கமின்மை கலாசாரம் அதிகரித்துச் செல்கிறது”

எஸ்.தில்லைநாதன்



எமது மக்களிடையே ஒழுக்கமின்மை கலாசாரம் அதிகரித்துச் செல்வது குறித்து வேதனை வெளியிட்டுள்ள வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், 1970 1980ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ். நகரமே இலங்கையில் தூய்மையான நகரமாக அடையாளப்பட்டிருந்ததை நினைவு கூர்ந்துள்ளார்.

அத்துடன், இது எங்களின் நகரம். நாங்கள் வாழும் நகரம்.

தொடர்ச்சி P2

## “தொற்றுநோய் அபாயம்”

எம்.எஸ்.எம்.ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாகத் தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதால், பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் வியாழக்கிழமை (23) தெரிவித்துள்ளார். வெள்ள நீர் சுகாதாரமற்று காணப்படுவதால் இந்த நீரில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும்,

தொடர்ச்சி P2

பெருந்தோட்ட மக்களுக்கு

## 2025க்குள் 4,350 புதிய வீடுகள்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தோட்ட மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 2025ஆம் ஆண்டிற்குள் 4,350 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு பெருந்தோட்ட மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து அவர்களை வறுமை நிலையிலிருந்து மீட்டெடுப்பது அரசாங்கத்தின் பிரதான நோக்கமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தோட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை தங்களது அரசியல் நட்பு வட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது எனவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இப் புதிய வீடுகள் தோட்ட புறங்களில் வாழும் உரிய பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பெருந்தோட்ட நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுடன் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் 21ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “வெட்கம் இருந்தால் வெளியேற வேண்டும்”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற பல கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஆகியோரை பராமரிக்கும் பொறுப்பில் இருந்து நாட்டு மக்களை விடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கொழும்பு-05 பகுதியில் வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது. இந்த வீட்டின் நடைமுறை சந்தை பெறுமதி 2598.5 மில்லியன் ரூபாய் நடைமுறை மாத வாடகை கட்டணம் 1,275,000 ரூபாய் இந்த வீட்டில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொழும்பு -07 பெஜ்ஜட் பகுதியில் வழங்கப்பட்டிருந்த வீடு 3,132 மில்லியன் ரூபாய் பெறுமதியானது. இதன் நடைமுறை சந்தை மாத வாடகை கட்டணம் 29 இலட்சம் ரூபா .இந்த வீட்டில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவும் வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாச கொழும்பு 07 இல் உள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான வீட்டில் வசித்தார். தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு-07 பகுதியில் 1005.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடு வழங்கப்பட்டது. இவர் இன்றும் இந்த வீட்டில் தான் வசிக்கிறார்.அந்த வீட்டின் நடைமுறை சந்தை மாத வாடகை 9 இலட்சம் ரூபாயாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் பௌத்தாலோக்க மாவத்தை வீடு தொடர்பில் குறிப்பிட்டதன் பின்னர் ‘மஹிந்தவின் வீட்டைப் பாதுகாப்போம்’ என்று அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வீடு 1 ஏக்கர் 13.8 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சுமார் 3,128 மில்லியன் ரூபாய் பெறுமதியானது.

46 இலட்சம் ரூபாய் மாத வாடகை பெறுமதியானது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க வசிக்கும் வீட்டின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை. அவர், நாடு திரும்பியதும் வீட்டை மதிப்பிடுமாறு குறிப்பிட்டுள்ளார். ஆகவே, வெகு விரைவில் அந்த வீட்டின் பெறுமதி தொடர்பான விபரங்கள் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் வீடுகளைப் பராமரிப்பதற்கும், பாதுகாப்பு வழங்குவதற்கும் மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் வீட்டுக்குப் பெருமளவிலான நிதி செலவிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு 33 இலட்சம் ரூபாய், 2022ஆம் ஆண்டு 345,000 ரூபாய், 2023ஆம் ஆண்டு 18 மில்லியன் ரூபாய், 2024ஆம் ஆண்டு 9 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள அரச இல்லத்தில் வசித்துள்ளார். இக்காலப்பகுதியில் மாத்திரம் அந்த வீட்டைப் பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் 430 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் ஏன் முன்னாள் ஜனாதிபதிகளையும், அவர்களின் குடும்பத்தாரையும் பராமரிப்பற்கு பணம் செலவழிக்க வேண்டும்? வெட்கம் என்பதொன்று இருக்குமானால், இவர்கள் இந்த வீடுகளை விட்டு வெளியேற வேண்டும். வீடுகளில் இருப்பவர்களுக்கும் வெட்கமில்லை, அவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். ஒருவர் கடற்படையில் இருந்ததாகவும், பிறிதொருவர் விஞ்ஞானி என்றும் குறிப்பிடப்படுகிறது. பெற்றோரைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு பிள்ளைகளுக்கு உண்டு. ஆகவே, முன்னாள் ஜனாதிபதிகளை அவர்களின் பிள்ளைகள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அரச இல்லங்களை விட்டு வெளியேற வேண்டுமெனப் பிரத்தியேகமாகக் குறிப்பிடத் தேவையில்லை. வெட்கம் என்பதொன்று இருக்குமானால் இவர்கள் வெளியேற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## ரயில் இ-டிக்கெட் மோசடி: மூவர் கைது

சந்தேக நபரிடம் மேலும் விசாரித்ததில், இந்த டிக்கெட்டுகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிற சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு சந்தேக நபர் மாத்தளை பகுதியில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார், அவரிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில். இ-டிக்கெட்டுகள் 29 மற்றும் ரூ. 131,000 ரூபாய் பணத்தை வைத்திருந்த மற்றுமொரு சந்தேக நபர் கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்த இ-டிக்கெட்டுகளை வழங்கிய தரப்பினரிடம் குற்றப் புலனாய்வுத் துறை மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

## அனுரவுக்கும்...

பிங்கிரியா மற்றும் நாரம்மல பகுதியில் 2014ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி, இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 61,46110 ரூபாய் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறை கைது செய்துள்ளது.

அந்த நோக்கங்களுக்காக அதைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அவர் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரச்சாரத்திற்காக பணத்தைப் பயன்படுத்தியுள்ளார். அவர்களுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டது, மேலும் ஒரு வருடத்திற்கு மாதத்திற்கு ஒரு முறை குற்றப் புலனாய்வுத் துறையில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

## “இனிமேல் நான் இப்படிதான் இருப்பேன்”

இந்நிலையில், எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்ற முறைப்பாடு 36 நாட்கள் கடந்துள்ளன. பாராளுமன்றத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்படுபவர் மக்களின் பிரச்சினைகளைக் கதைப்பதற்காக இங்கே நேரம் ஒதுக்கப்பட வேண்டும். நான் முறைப்பாடு செய்து 36 நாட்களின் பின்னர் எனக்குப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என்பதனை கூறுவதற்காக இன்று சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனது முறைப்பாட்டின் பின்னர், மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எனக்கு அடித்தார் என்பதற்காகக் குழு அமைக்கப்பட்டது. அந்த முறைப்பாடு அன்றே முடிக்கப்பட்டுள்ளது. ஆனால், நான் கூறிய விடயம் தொடர்பில் குழு அமைக்கப்படவும் அதற்கான கேள்விகளும் கேட்கப்படவில்லை.

66 நாட்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இடமளிக்கப்படவில்லை என்றால் அது அரசாங்கத்தின் வெட்கம் கெட்ட செயலாகும். ஏன் சாதாரணமான சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினருக்கு இவர்கள் பயப்பட வேண்டும். ஏன் அவர்கள் அது தொடர்பான குழுவொன்றை அமைக்க முடியாதுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது பெரிய எதிர்பார்ப்பில் இருந்தேன். யாழ்ப்பாண மக்கள் இந்தக் கட்சியில் இருந்து மூன்று எம். பிக்களை எதிர்பார்ப்புடன் தெரிவு செய்துள்ளனர். எனக்கு ஏன் பேச இடமளிப்பதில்லை. ஏன் அரசாங்கம் பயப்படுகின்றது. உங்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இன்றிலிருந்து அதனை தீர்த்துக்காட்டுங்கள் என்றார்.

## “7 இலட்சம்...

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் நலன்புரித் திட்டங்களை விரிவுப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 250க்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த ஆண்டு இலவச காலணி வழங்கப்படும்.இதற்கமைய சுமார் 7 இலட்சம் மாணவர்களுக்கு இவ்வாறு காலணிகள் வழங்கப்படும்.

அத்துடன், கல்வி மறு சீரமைப்புக்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

நவீன உலகுக்குப் பொருத்தமான வகையில் கல்விக் கொள்கைத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

பரீட்சை முறைமைக்குப் பதிலாக மாணவர்களுக்கு இணக்கமானதாக அமையும் கல்வி முறைமையை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றோம் என கூறியுள்ளார்.

## சீருடையுடன் போதையில்...

வீடியோவின்படி, பொலிஸ் ஜீப்பில் வரும் பொலிஸ் அதிகாரிகள் குழு, படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்த குடிபோதையில் சீருடையில் இருந்த ஒரு பொலிஸ் அதிகாரியைத் தூக்கிச் செல்வதைக் காணலாம். விசாரணையில் அவர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர் என்பது தெரிய வந்துள்ளது.

பொலிஸ் சீருடையை அவமதிக்கும் வகையில் அதிகாரிகள் நடந்து கொண்டதற்கு பதில் பொலிஸ் மா அதிபர் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும், அவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, பாணந்துறை பிரிவுக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில், போதைப்பொருளுக்கு மிகவும் அடிமையான பொலிஸ் அதிகாரி பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு, மற்ற அதிகாரி வேறு பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

## “யார் கூறுவது...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(23) அரசாங்க நிதி தொடர்பான குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறை திணைக்களத்தின் அதிகாரிகளை அண்மையில் அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு அழைத்தோம். 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்த தொகை மற்றும், 2025ஆம் ஆண்டு நெல் மற்றும் அரிசி உற்பத்தி தொகை எதிர்பார்ப்பு குறித்து கேள்வியெழுப்பினோம்.

2024ஆம் ஆண்டு 1 மில்லியன் மெற்றிக்தொன் நெல் இல்லாமல் போயுள்ளது. அதனால் தான் தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறை திணைக்களம் குறிப்பிட்டதைக் கேட்டு ஆச்சரியம் ஏற்பட்டது.

2024ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தில் 4.39 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அக்காலப்பகுதியில் 2.9 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாக நாங்கள் குறிப்பிட்டோம்.

2000ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்த தொகை தொடர்பில் தரவுகளைக் கோரியுள்ளேன்.

அதிகாரிகள் பொய்யான தரவுகளை குறிப்பிடுகிறார்களா? அல்லது வர்த்தகர்கள் பொய் குறிப்பிடுகிறார்களா? என்பதை அறிந்துக் கொள்ள முடியும். தரவுகள் பொய்யாயின் தீர்மானங்களும் தவறானதாக அமையும். ஆகவே, இவ்விடயம் குறித்து ஆராயுமாறு விவசாயத்துறை அமைச்சுக்கு பரிந்துரைக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

## “தொற்றுநோய்...

இதனால் பாரிய தொற்று நோய் ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களுக்கு இந் நீர் மூலம் வயிற்றோட்டம் மற்றும் தோல் நோய் என்பன ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும், சகலரும் கொதித்தாறிய நீரைப் பருக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் நீர் நிலைகளில் பிள்ளைகளை நீராடச் செல்ல விடாது தடுக்க வேண்டும். வெள்ளப் பெருக்கினால் உயிர் ஆபத்து ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதால் அவதானமாக இருக்க வேண்டும். என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களில் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கி உள்ளவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரிகளினால் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் நோய்த் தொற்றுக்கு உள்ளாவோர் உடனடியாக அரசாங்க வைத்தியசாலைக்கு செல்லுமாறும் கர்ப்பிணித் தாய்மார்கள் வெள்ள நீரில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

வெள்ள அனர்த்த நிலைமைகளின் போது, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் வானிலை அவதான நிலையம் ஆகியவற்றால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## பழங்குடியினருக்கு...

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு, வேடுவ இன மக்களின் வரலாற்றுப் பெறுமதியைப் பற்றி விளக்கிய பழங்குடியின தலைவர் ஊருவரிகே வன்னியளத்தா, அவர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி, தயாரிக்கப்பட்ட பழங்குடியின உரிமைச் சட்டம் மற்றும் பழங்குடியினர் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விளக்கிய பழங்குடியின தலைவர், கடந்த அரசுகள் சில நடவடிக்கைகளை எடுத்தாலும், தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

வேடுவ இன மக்கள் நாட்டின் வரலாற்றுச் சொத்து என்றும், அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது என்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை சுற்றாடல் அமைச்சு துரிதமாக முன்னெடுக்கும் என சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்ட நிலைமைகள் மற்றும் அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து சுற்றாடல் அமைச்சு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விளக்கியுள்ளார்.

பழங்குடியினர் எமது நாட்டின் ஒரு அங்கம் எனவும், ஏனைய அனைவருக்கும் இருக்கும் உரிமைகள் பழங்குடியினருக்கும் இருக்க வேண்டும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இங்கு தெரிவித்துள்ளார்.

## “ஒழுக்கமின்மை கலாசாரம்...

வாழப்போகும் நகரம் என்பதை ஒவ்வொருவரும் மனதிலிருத்திச் செயற்பட வேண்டும் என வலியுறுத்திய, அவர் ‘தூய்மையான இலங்கை’ செயற்றிட்டத்தின் கீழ் ‘நகரைத் துப்புரவு செய்தல்’ வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அப்பால் நகரை அதே நிலையில் பேணுவதே முக்கியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

‘தூய்மையான இலங்கை’ செயற்றிட்டம் முன்னெடுப்புத் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், ‘தூய்மையான இலங்கை’ செயற்றிட்டத்தின் கீழ், எதிர்வரும் 03.02.2025 அன்று யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் பாதுகாப்புத் தரப்பினர், பாடசாலை மாணவர்கள், திணைக்களப் பணியாளர்கள், பொதுமக்கள் பங்கேற்புடன் துப்புரவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் பல தடவைகள் நகரைச் சுத்தம் செய்தல், கடற்கரையோரங்களைச் சுத்தம் செய்தல் ஆகிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், துப்புரவு செய்த மறுநாளே குப்பைகளை அந்த இடங்களில் பொதுமக்கள் கொட்டுவதால் சுத்தம் செய்ததன் நோக்கம் நிறைவடையாத சந்தர்ப்பங்களே அதிகம் என தெரிவித்தார். இம்முறை அவ்வாறான நிலைமை ஏற்படக் கூடாது எனவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

## 2025க்குள் 4,350 புதிய வீடுகள்

மேலும், குடிசன புள்ளி விபர மதிப்பீடுகளுக்கு அமைய 83.75% மானோர் இலங்கையில் சொந்த குடியிருப்புக்களில் வாழ்ந்து வருவதோடு அதில் 5.6% மானோர் தோட்ட புறங்களைச் சார்ந்தவர்களாவர்.

இது மிகவும் ஒரு குறைந்த எண்ணிக்கையாகும். இலங்கையின் வாழும் சமூக கட்டமைப்பின் படி வறுமையானோர் 11.9% ஆவார். அதிலும் பெருந்தோட்ட பகுதியில் 29.7% மானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில், தோட்ட புறங்களில் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கான வீட்டுப் பிரச்சினைக்கான விரைவான ஒரு தீர்வினை பெற்றுக்கொடுப்பது எமது தலையாய கடமையாகும் 10,000 இந்திய உதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் 1,300 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் 202ஆம் ஆண்டு முடிவதற்குள் 4,350 வீடுகளும் 2026ஆம் ஆண்டில் மேலும் 4,350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு தோட்ட மக்களுக்கு அவ் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன அவர்களும் தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ அவர்களும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி அவர்களும் அரசாங்கத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் மேல் மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

## இலங்கையில்

# திருமணத்துக்கு பொது வயதெல்லை

இலங்கையில் திருமண வயதுக்கான எல்லையை திருத்துவது தொடர்பாக ஒன்றியத்தின் தலைவி அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் அதன் தலைவி அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தலைமையில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) கூடியது. இக்கூட்டத்தில் ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான சமிந்திராணி கிரிஎல்லே மற்றும் சமன்மலி குணசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

10ஆவது பாராளுமன்றத்திற்கான பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் செயற்திட்டத்தை தயாரிப்பது, குறித்து ஒன்றியத்தின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்திலேயே இலங்கையில் திருமண வயது எல்லையை திருத்துவது



© Parliament of Sri Lanka I Nuwan Duminda UG

தொடர்பாக ஒன்றியத்தின் தலைவி அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இலங்கையில் தற்பொழுது காணப்படும் பல்வேறு திருமண சட்டங்களுக்கு அமைய, திருமண வயது எல்லையை பொது எல்லையாகக் கொண்டுவருவதற்குத் தேவையான திருத்தத்தை மேற்கொள்ள சிவில் சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அதன் ஊடாக ஒன்றியத்தின் மூலம் இறுதிப் பரிந்துரையை வழங்குவதற்கும் இதன்போது முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், 'பிள்ளை' என்பதை சரியான முறையில் வரைவிலக்கணம் செய்வதற்குத் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பெண்களின் மேம்பாடு மற்றும் வலுப்படுத்தல் தொடர்பில் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி விஜேரத்ன முன்வைத்த திருத்தப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய சட்டமூலத்தை மீண்டும் முன்வைக்கவும் இங்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் முன்னாள் தலைவி சுதர்ஷினி பர்னாந்துரபுள்ளே முன்வைத்த தனிநபர் சட்டமூலத்துக்கான திருத்தங்களை மேலும் ஆராய்ந்து, அதற்குப் புதிய முன்மொழிவுகளை உள்வாங்கி மீண்டும் பாராளுமன்றத்துக்கு முன்வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தத் திருத்தங்களுக்கு ஒன்றியத்தின் உறுப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை முன்வைக்குமாறும் ஒன்றியத்தின் தலைவி மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெண்களை வலுப்படுத்தும் நோக்கில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள பத்தாவது பாராளுமன்றத்தில் நடவடிக்கை எடுப்பதாக ஒன்றியத்தின் தலைவி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.






# 163ஆவது ஜனன தினம்

■ வி.ரி.சகாதேவராஜா

உலக சரித்திரத்தில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சரித்திர புருஷராகத் திகழ்ந்தவர் வீரத் துறவி சுவாமி விவேகானந்தர். அவரது 163 வது ஜனன தினம் மட்டக்களப்பில், செவ்வாய்க்கிழமை(21) அனுஷ்டிக்கப்பட்டது. அவரது வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை வாசகர்களுக்காக நினைவு கூருகிறோம்.


155 ஆண்டுகளுக்கு முன்பு குதிரை வண்டி தான் போக்குவரத்துக்குப் பயன்பட்டது. அப்படியொரு குதிரை வண்டியில் ஒரு சிறுவன் பள்ளிக்குச் செல்வது வழக்கம். ஒருமுறை வகுப்பில் ஆசிரியர் மாணவர்களிடம் நீங்கள் பெரியவனானதும் என்னவாக ஆசைப்படுகிறீர்கள் என்று கேட்டார்.

அதற்கு ஒவ்வொரு மாணவர்களும் சட்டத்தரணி, ஆசிரியர், மருத்துவர் என சொல்லிக் கொண்டே வந்தனர், அப்போது, ஒரு மாணவன் கூறினான் "நான் குதிரை வண்டிக்காரனாவேன் ". சுற்றியிருந்த மாணவர்கள் எல்லாம் சிரித்தனர். ஆசிரியரும் அவனைக் கேலி செய்து உட்காரச் சொன்னார். அந்த சிறுவன் வீட்டிற்குச் சோகமாக வந்ததைப் பார்த்து தாய், என்னவென்று கேட்க, நடந்ததைக் கூறினான் அந்த சிறுவன். அதைக் கேட்ட அந்த தாய் மகன் மீது கோபம் கொள்ளவில்லை, மாறாக அந்த தாய், "நீ ஏன் குதிரை வண்டிக்காரனாக ஆசைப்படுகிறாய், அதற்கு என்ன காரணம் என்ன" என்று கேட்டார். அதற்கு அந்த சிறுவன், "தினமும் பள்ளிக்குச் செல்லும் போது, குதிரை வண்டிக்காரன் குதிரை ஓட்டுவதைப் பார்ப்பேன், அவர் குதிரை ஓட்டுவது அழகாக இருக்கும். எனக்கும் அதுபோல் குதிரை வண்டி ஓட்ட வேண்டும் என்று ஆசை, அதனால் தான் அப்படிக் கூறினேன்" என்று கூறினான்.இதைக் கேட்ட தாய், வீட்டினுள் சென்று ஒரு மகாபாரத படத்தை எடுத்து வந்தார், அதை மகனிடம் காட்டி "நீ குதிரை வண்டிக்காரனாக வேண்டும் என்று சொன்னது தவறில்லை, ஆனால், நீ எப்படிப்பட்ட குதிரை வண்டி ஓட்டுபவனாக இருக்க வேண்டும் தெரியுமா? மகாபாரதத்தில் அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டினானே கிருஷ்ணன், அந்த கிருஷ்ண போன்ற தேர் ஓட்டியாக இருக்க வேண்டும்" என்றார். அந்த சிறுவன் தான், தற்போது உலகெங்கிலும் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபித்த வீரத் துறவி சுவாமி விவேகானந்தர் ஆவார்.

















## வெள்ளத்தில் மூழ்கிய அம்மன் ஆலயம்

■ ஹஸ்பர் ஏ.எச்

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை பாலம்போட்டாறு அருள்மிகு பத்தினி அம்மன் ஆலயம் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது.

# சகோதரனை கொன்றவர் கைது

■ எச்.எம்.எம்.பர்ஸான்

உடன் பிறந்த சகோதரனை கொலை செய்து விட்டு தலைமறைவாகி இருந்த நபர் வாழைச்சேனை பொலிஸாரினால் வியாழக்கிழமை (23) கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் வைத்து 43 வயதான இரு பிள்ளைகளின் தந்தை தனது உடன் பிறந்த சகோதரனால் புதன்கிழமை(22) கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்து விட்டு தலைமறைவாகிய நபரை வாழைச்சேனை பொலிஸார் பிறைந்துறைச்சேனை பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மிதி பலகையில் தொங்கும் பாடசாலை மாணவர்கள்

■ டிசந்ரு. செ.தீவாகரன்

நுவரெலியா -தலவாக்கலை பிரதான வீதியில் செயற்படும் பஸ் சேவைகள் உரிய நேரத்துக்கு ஈடுபடாமையால், அங்கிருந்து அரச, தனியார் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் தொழிலுக்குச் செல்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மேலும் பாடசாலை மாணவர்கள் மிதிபலகையில் வெளியில் தொங்கியபடி பயணம் செய்கின்றனர்.

இவ்வீதியில் தினமும் சேவையிலிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் தொழில் புரியும் சாரதியோ அல்லது நடத்துநரோ விடுமுறை என்றால், சேவையில் ஈடுபடும் பேருந்தும் திடீரென முற்றாக நிறுத்தப்படுவதாகவும் , பேருந்தில் ஏதேனும் பழுது ஏற்படும் சமயத்திலும் பேருந்துகள் நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.




இதனால் அவற்றில் தினமும் பயணிக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், அன்றாட தொழிலுக்குச் செல்வோர் சீரான பஸ் போக்குவரத்து இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக கிலாரண்டன், டெஸ்போட், கிரிமிட்டி, வாழைமலை, அவோக்கா, கார்லிபேக் போன்ற பிரதேசங்களை சேர்ந்தவர்களே போக்குவரத்துச் சிக்கலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இந்த பஸ்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமையால், காலை 6.30 மணிக்கு தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கிப் புறப்பட்டு, காலை 7.20 மணி அளவில் டெஸ்போட், கிரிமிட்டி வழியாகச் செல்லும் பேருந்தில் கூட்டம் நிரம்பிக் காணப்படுவதாகவும், அதில் ஏறி பயணம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இ.போ.ச பேருந்துக்கான மாதாந்த பருவச்சீட்டு பெற்றுக்கொண்டவர்கள் முச்சக்கரவண்டிகள் மற்றும் வேறு வாகனங்களில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

# மாணிக்கக்கல் அகழ்ந்த நால்வர் கைது

■ எஸ்.கணேசன்

மகாவலி ஆற்றுக்கு நீர் வழங்கும் ஹட்டன் ஓயாவில் பெரிய குழிகளைத் தோண்டி, சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர், ஹட்டன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் புதன்கிழமை (22) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் ஓயாவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஒரு குழு மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக ஹட்டன் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

குறித்த தகவலின் அடிப்படையில், ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார், அங்கு சோதனை நடத்தப்பட்டு, மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த 30-50 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


## கம்பஹா பிரதேச சபை

### 2025 ஆம் ஆண்டிற்கான விநியோகஸ்த்தர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்

2025 ஆம் ஆண்டிற்கான, பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்திற்காக இந்த பிரதேச சபையில் பதிவு செய்ய விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்த்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 2025.02.28 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. விநியோகஸ்த்தர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்ய விரும்புவோர் பின்வரும் விவரங்கள் உட்பட தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2025.02.28 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை அமுல்படுத்தும் அலுவலர், கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். "பதிவு தபாலில் அனுப்பலாம் அல்லது கையில் வந்து ஒப்படைக்களாம். விண்ணப்ப கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "விநியோகஸ்த்தர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பதிவு 2025" எனக் குறிக்கப்பட வேண்டும்.

i. பொருட்கள் / சேவைகள் விநியோகஸ்த்தர்களின் பெயர் மற்றும் முகவரி
ii. தொலைபேசி / தொலைநகல், மின்னஞ்சல் முகவரி
iii. பதிவு செய்ய வேண்டிய பொருட்கள் / சேவையின் இலக்கம் மற்றும் பெயர் (அட்டவணையின்படி)
iv. வணிகத்தின் பெயர் மற்றும் முகவரி
v. வணிகப் பதிவு இலக்கம் (வணிகப் பதிவுச் சான்றிதழின் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
vi. அனுபவம் பற்றிய விவரங்கள்
vii. கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்பு துறையில் பதிவு செய்த விவரங்கள் (அந்த சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

- எதிர்பார்க்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் அட்டவணை மற்றும் மாதிரி விண்ணப்பத்தை www.gampaha.ps.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

2. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை பணமாகவோ அல்லது காசோலையாகவோ "தலைவர், கம்பஹா பிரதேச சபைக்கு" செலுத்தலாம். (இதற்கான பண ஆணைகள் ஏற்கப்படாது)

3. ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்ய விரும்புவோர் எழுத்துப்பூர்வ ஆதாரம் மூலம் தங்களின் தகுதியை நிரூபிக்க வேண்டும்.

**2025.01.24 ஆம் திகதி**
**கம்பஹா பிரதேச சபை மூலம்**
**தொலைபேசி இல 033 2222020**

**எஸ்.ஏ.என்.பீ.சுரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை**
**அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை.**

# அரசாங்கத்தின் செயற்பாடுகள் பற்றி பொது மக்களுக்கு தெளிவு உள்ளதா?

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள், அமைச்சுகளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் செயற்பாடுகளில் புதிய அமைச்சர்களுக்கும், அரசாங்கத்தின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் போதியளவு பயிற்சிகள் இல்லை என்பது தெளிவாகின்றது.

குறிப்பாக, அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களைத் தொடர்புகொள்ள முயற்சிக்கும் செயற்பாடுகள் பெரும்பாலும் தோல்வியில் முடிவடைகின்றன. பலர் புதிய முகங்களாகப் பாராளுமன்றம் வருகை தந்துள்ள நிலையில், இன்னமும் அந்த பொறிமுறைகள் தொடர்பில் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதையும், அவற்றில் எவ்வாறு இயங்க வேண்டும் என்பது தொடர்பில் தம்மைத் தேற்றிக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான முன் அனுபவம் இன்மையும் பொது மக்கள் மத்தியில் தமது செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்த முன்வராமைக்கு ஒரு பிரதான காரணமாக அமைந்திருக்கலாம்.

எதிர் தரப்பினர் இந்த தொடர்பாடல் மூலங்களைப் பயன்படுத்துவதில் கைதேர்ந்தவர்களாக உள்ளனர். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளுக்கும் எதிர்மறையான விமர்சனங்களைக் கட்டவிழ்த்துவிடுவதில் அவர்கள் தமது தேர்ச்சித் தன்மையை சிறப்பாக வெளிப்படுத்துகின்றனர்.

இந்த வாரம் நடந்தேறிய சில சம்பவங்களை உதாரணமாகப் பார்த்தால், அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஒருவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் தேங்காய் பிரச்சினைக்கு காரணம் மக்கள் நுகரும் தேங்காய் சம்பல் மற்றும் பால் சொதி போன்றவற்றின் பாவனையைக் குறைக்க வேண்டும் எனும் அர்த்தத்தில் தேங்காய் நுகர்வின் பின்னர் மிஞ்சும் சிரட்டை மற்றும் தும்பு போன்றவற்றுக்கு ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் காணப்படுகின்றமை தொடர்பான முக்கியமான தகவலுக்கு முக்கியத்துவமளிக்கத் தவறியிருந்தார். இதனால் அவரின் முழு உரையினதும் முக்கியத்துவம் வலுவிழந்ததாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

அதுபோலவே, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப் பெறுவது தொடர்பிலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள இல்லம் மற்றும் அதன் பெறுமதி தொடர்பில் ஆளும் மற்றும் எதிர் தரப்பினர் பரவலாகப் பேசியிருந்தனர். இரு தரப்பும் இந்த விடயத்தைக் கையாளும் விதமும் கேள்விக்குரியதாக அமைந்துள்ளது.

அரச தரப்பினரின் இந்த தொடர்பாடல் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு போதிய தொடர்பாடல், பொது உறவுகள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படவில்லை என எண்ணத் தோன்றுகின்றது. இந்த இடைவெளியைச் சீர் செய்வதற்கும், ஊடகங்களுக்கு முன்னால் கருத்துகளை வழங்கும் முன்னரும் ஏன் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் கூட தாம் எதைப் பேசுகின்றோம், எதற்காகப் பேசுகின்றோம் என்பன தொடர்பில் முன் பயிற்சியைப் பெற்றுக் கொண்டு செயலாற்றுவது அவர்களுக்கு உசிதமானதாக அமைந்திருக்கும்.

நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயனளிப்பதாக இருக்கும். அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளைப் பற்றி ஜனாதிபதி ஊடகங்களுக்கு முன்னால் வந்து தெளிவுபடுத்திக் கொண்டிருக்க முடியாது. அரசின் ஏனையவர்களும் தத்தமக்குரிய பொறுப்புகளைப் பற்றித் தெளிவுபடுத்துவது சிறந்தது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எந்த நாட்டில் நாம் வாழ்கின்றோமே, அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அதற்காகத் தாய் நாட்டை மறக்க வேண்டியதில்லை. மனசாட்சிக்கு விரோதமானதாய், தாய் மண்ணை நிராகரிப்பது நன்றி மறந்த செயலாகும்.

எம்மவர்களில் அநேகர் வெளிநாடு சென்றதும், தங்கள் பிள்ளைகளைத் தாய் மொழியை மறப்பவர்களே அதிகம். அத்துடன், எமது பாரம்பரிய கலாசாரத்தையும் மறந்தே விடுவது கவலைக்குரியது.

ஆயினும், அநேக பெற்றோர் வெளிநாட்டில் இருந்தும் தாய் மொழி அறிவை வளர்ப்பதுடன் கலை, கலாசாரப் பண்புகளையும் ஊட்டிவிடுகின்றனர்.

எனினும், அடுத்த அடுத்த தலைமுறைகளில் ஒரு சாரார் தொடர்ந்தும் காரசாரமான பாரம்பரியங்கள் மொழிகளைப் பின்பற்றுவார்களா என்பது சந்தேகம் தான்.

எனவே, வெளிநாட்டில் வாழும் பெற்றோர்கள் அடிக்கடி தங்கள் தாய் நாட்டுக்கு வந்து, உறவுகளைச் சந்திப்பதும் ஆன்மிக விழாக்கள், பண்டிகைகளில் கலந்து கொண்டால் மிகவும் நல்லது.

உயர் கல்வியில் சிறந்து விளங்கும் எம்மவர்கள் இசை, நடனம், விளையாட்டு போன்ற துறைகளில் சிறப்பாக இருந்து, தாய்நாட்டை மேன்மைப்படுத்துகின்றனர்.

இந்நிலை தொடர்ந்தால், வெளிநாடுகளில் வாழும் எமது பிள்ளைகள் உலகுக்கே முன்னுதாரண புருஷர்களாக இருப்பார்கள். பண்டைய பெருமைகளை வளர்த்திடுக!

நன்றி–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### மக்கள் அவதி




யாழ்ப்பாணம்- அராலி பாலத்தில் இருந்து அராலி துறைக்குச் செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பாரிய சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான இவ் வீதியானது, சுமார் 789 வழித்தட பேருந்து பயணிக்கும் பிரதான வீதியாக அமைந்துள்ளது.

கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பேருந்து பயணிப்பதுடன், வயோதிகர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்குச் செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோர் பயன்படுத்தும் இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்துப் புனரமைத்துத் தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

- பு.கஜிந்தன்

பொருளாதாரநெருக்கடியின் பின்னரான இலங்கை–04

# பொருளாதார வரலாறு: தேயிலையும் இறப்பரும்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கோப்பியின் வீழ்ச்சியுடன், பிரித்தானியத் தோட்டக்காரர்கள் மாற்று ஏற்றுமதிப் பயிர்களை முயன்றனர். முதலில் 'சின்கோனா' (குயினைன்) பின்னர் தேயிலை என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. 'சின்கோனா' பயிர்ச் செய்கை விரைவில் வெற்றியடைந்தாலும், லண்டனில் அதன் ஏற்றுமதி சந்தையானது கோப்பியைப் போல, விரிவான அளவில் வளர்க்க முடியாத அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. இந்த உண்மையைப் பிரித்தானியத் தோட்டக்காரர்கள் விரைவிலேயே உணர்ந்து கொண்டார்கள். அதனால் அது ஏற்றுமதி பயிராகக் கைவிடப்பட்டது. கோப்பி பயிர்ச்செய்கை உச்சக்கட்டத்திலிருந்த போது, சில இடங்களில் தேயிலைப் பயிர்ச்செய்கை முயற்சிசெய்யப்பட்டது. ஆனால், அது வெற்றியளிக்காமையால், அப்போது, அது கைவிடப்பட்டது. ஆனால், மீண்டும் 1867இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய 'அஸ்ஸாம்' வகை தேயிலை வெற்றியளித்தது. இதன் பயிர்ச்செய்கைக்கான நிலப்பரப்பு வேகமாகஅதிகரிக்கத் தொடங்கியது. 1890களில் தேயிலை நாட்டின் முதன்மையான ஏற்றுமதிப் பயிராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. அது அன்றிலிருந்து இன்றுவரை இந்த நிலையைப் பெற்றுள்ளது.

1885இல் சுமார் 10 மில்லியன் பவுண்டுகளாக இருந்த மொத்த தேயிலை உற்பத்தி 1900இல் சுமார் 150 மில்லியன் பவுண்டுகளாக அதிகரித்தது. அன்றைய திகதியில் இலங்கை தேயிலை மொத்த உலக உற்பத்தியில் கால் பங்காக இருந்தது. ஏற்கெனவே தேயிலையின் பரப்பு இதுவரை கோப்பி உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பை விட அதிகமாக இருந்தது. 1885-89இல் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 91 பவுண்டுகள் என இருந்த மகசூல், 1900இல் 320 பவுண்டுகளாக அதிகரித்தது. தேயிலைத் தோட்டங்களில் சுமார் 440,000 பேர் (அக்கால மொத்த தொழிலாளர் தொகையில் 27%) பணியாற்றினர்.

தேயிலை உற்பத்தி கிட்டத்தட்ட கோப்பியின் அதே வழியில் ஏற்பாடு செய்யப்பட்டது. பிரித்தானியாவில் இருந்து குறிப்பிட்ட அளவு மூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனுடன், பிரித்தானிய வங்கிகள் மற்றும் இலங்கையில் உள்ள ஏஜென்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட கடன் ஊடாக மூலதனம் சேர்க்கப்பட்டது. ஆனால் முக்கிய வித்தியாசம் யாதெனில், கோப்பித் தோட்டங்களின் உரிமையாளர்களாகத் தனிநபர்களே இருந்தால். தேயிலைத் தோட்டங்களைப் பொறுத்தவரையில், பெருநிறுவனங்களில் இதில் அதிகமாக முதலிட்டன. இன்னும் சரியாகச் சொல்வதானால், பெருநிறுவனங்களாலேயே பெரியளவிலான மூலதனத்தைத் தேயிலைத் தோட்டங்களில் முதலிட முடிந்தது.

புதிய நிலங்கள், குறிப்பாக மிக உயரமான பகுதிகளில் உள்ள நிலங்கள், முதல் முறையாக கையகப்படுத்தப்பட்டு, தேயிலை உற்பத்திக்காக விற்கப்பட்டன. 1878இல் தானிய வரிக் கட்டளைச் சட்டம் பயிரிடப்பட்ட நெல் நிலங்களுக்கு நிலவரி விதித்தது. வரி செலுத்தத் தவறியதால், பலவிவசாயிகள் வெளியேற்றப்பட்டனர். அந்நிலங்கள் அரசாங்கத்தால் அபகரிக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டத்தில் 1882 மற்றும் 1885க்கு இடையில் 2,889 நெற் பயிர் நிலங்கள் தானிய வரி செலுத்தத் தவறியதற்காக அரசாங்கத்தால் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் தேயிலை பயிரிடுவதற்காக அந்நியப்படுத்தப்பட்டன. 1897இல் அரசாங்கம், 1840இல் முந்தைய அரச நிலங்கள் (ஆக்கிரமிப்பு) ஆணைப்படி, 'வளர்க்காத நிலத்தின் மீது மூன்று மாதங்களுக்குள் உரிமைகோரவில்லை என்றால், அது அரசின் சொத்தாகக் கருதப்படும் 'என்று அறிவிக்கும் பாழான நிலங்கள் கட்டளைச் சட்டத்தை இயற்றியது. இந்த நிலங்களும் தேயிலை உற்பத்திக்காக விற்கப்பட்டன. தேயிலை உற்பத்திக்கு மேலும் மிக அதிகமான மனித உழைப்பு தேவைப்பட்டது. இதுமீண்டும் ஒப்பந்தம் செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வருகைக்கு வழிசெய்தது. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய அதிகமான தொழிலாளர்கள் வரத் தொடங்கினர். 1921இல் இத் தோட்டங்களில் மொத்த புலம் பெயர்ந்த மக்கள் தொகை 500,000ஐ தாண்டியது.

தேயிலையின் உள்நாட்டு சிறு உடைமையாளரின் பயிர்ச்செய்கை, கோப்பியைப் போலல்லாமல், பெரிய தோட்டங்களுடன் ஒரேநேரத்தில் வளர்ந்தது. 1935இல் தேயிலையின் மொத்த நிலப்பரப்பில் 11% சிறு தோட்டக்காரர்கள் (வழக்கமாக 10 ஏக்கருக்கும் குறைவாக) வசம் இருந்தது. சில இலங்கை குடும்பங்கள் கூட பெரிய தோட்டங்களைச் சொந்தமாக வைத்திருந்தனர். (அதில் நன்கறியப்படாத ஆனால் குறிப்பிடத்தக்க ஒருவர் எஸ். ஜே.வி. செல்வநாயகம்). 1935இல் தேயிலை நிலப்பரப்பு 500,000 ஏக்கரை எட்டியது, இதில் 66,000 ஏக்கர் சிறு நிலப்பரப்புகளும் அடங்கும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அதுவரை சிறப்பித்துக் கொண்டிருந்த தனித்த பயிர் -முதலில் காபி மற்றும் பின்னர் தேயிலை -இறப்பர் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் மாற்றம் கண்டது. நாட்டின் பொருளாதாரம் சார்ந்து வந்த புகழ் பெற்ற மூன்று ஏற்றுமதிப் பயிர்களில் இரண்டாவது இதுவாகும். ஆசியக் கண்டத்தில் இறப்பர் தோட்டங்கள் முதன் முதலில் இலங்கையில் 1876இல் ஹென்றிவிக்காம் என்பவரால் நிறுவப்பட்டது. இலங்கையிலிருந்த பிரித்தானியத் தோட்டக்காரர்களின் குழுவால், உலகில் இறப்பர் தொடர்பான முதல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் 1909இல் இலங்கையில் நிறுவப்பட்டது. இந்த எளிய தொடக்கங்கள் 1913இல் இறப்பர் ஆராய்ச்சித் திட்டத்தை நிறுவுவதற்கு வழிவகுத்தன. அதைத் தொடர்ந்து 1914இல் இலங்கை இறப்பர் உற்பத்தியாளர்களால் ஆராய்ச்சி நிதியம் நிறுவப்பட்டது. பின்னர் 1920இல் இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டன. இறப்பர் ஆராய்ச்சிக்காக ஒருநிலம் ஒதுக்கப்பட்டது. இங்கு தொழில்நுட்பம் மட்டுமின்றி தரமான நடவுப் பொருட்களை இனங்காணல், அறிமுகப்படுத்தல், சிறுவிவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கு பிரிவு போன்றன உருவாக்குவதன் மூலம் செயல்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. 1925இலேயே உலகின் இரண்டாவது பழைமையான தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் இலங்கையில் அமைக்கப்பட்டது.

1900களின் முற்பகுதியில் தேயிலை இதுவரை பதிவு செய்யப்படாத மிகக் குறைந்தவிலையைப் பெறத் தொடங்கியது. 1900 மற்றும் 1904க்கு இடையில், 1885-89, 1890-94 மற்றும் 1895-99 காலகட்டங்களில் ஆண்டுக்கு சராசரியான 60, 49 மற்றும் 41 சென்ட்களுக்கு மாறாக, தேயிலை விலை ஒரு பவுண்டுக்கு சராசரியாக 36 சென்ட்களாக சரிந்தது. இந்த சூழ்நிலையின் விளைவாகவும், மலாயாவிலிருந்து இறப்பர் அப்போது அனுபவித்து வந்த ஏற்றம் காரணமாகவும், பிரித்தானியத் தோட்டக்காரர்கள் இலங்கையில் இறப்பர் பயிரிடத் திரும்பினர். 1900இல் சுமார் 1,750 ஏக்கரிலிருந்து, 1915இல் 250,000 ஏக்கராகவும், 1930இல் 500,000 ஏக்கராகவும் இறப்பர் பயிரிடும் நிலங்களின் அளவு அதிகரித்தது. முதல் உலகப் போரின் போது, இறப்பருக்கு ஏற்பட்ட பெரும் தேவை காரணமாக, இறப்பர் ஏற்றுமதியின் மதிப்பு 1917இல் தேயிலை ஏற்றுமதியின் மதிப்பை முந்தியது. இறப்பரின் விலை 1920களில் வரை வேகமாக அதிகரித்தது 1930இல் இலங்கை உலகின் மூன்றாவது பெரிய இறப்பர் உற்பத்தியாளராக மாறியது. 1930களின் பெரும் மந்த நிலை இறப்பரின் தேவையில் சரிவைக் கண்டாலும், இரண்டாம் உலகப் போரின் தொடக்கம் இறப்பர் உற்பத்திக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்தது. முதலாம் உலகப் போர்க் காலம் போலவே இப்போதும் இறப்பரின் விலைகள் கணிசமாக அதிகரித்தன. இக்காலப்பகுதியில் இறப்பர் தொழில்துறை புதிய ஏற்றம் நிலைமைகளை அனுபவித்தது.

ஆரம்பத்திலிருந்தே, இறப்பர் முக்கியமாகப் பிரித்தானிய நிறுவனங்களின் கைகளிலிருந்தது, அவை ஏற்கெனவே மலாயாவில் இறப்பர் முதலீடுகளுடன், களனி பள்ளத்தாக்கு மற்றும் தென்மேற்கு ஈர மண்டலத்தில் உள்ள சில சிறந்த இறப்பர் தோட்டங்களை அந்நிறுவனங்கள் சொந்தமாக்கின. ஆனால், சிறிய நிலப்பரப்பு (10 ஏக்கருக்கும் குறைவானது) ஆரம்ப காலத்திலிருந்தே இறப்பர் வளர்ப்பின் ஒரு அம்சமாக இருந்து இன்றும் அது தொடர்கிறது. இறப்பர் தோட்டங்களுக்கான உழைப்புக்காக, மீண்டும் இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்த தொழிலாளர்களையே கொண்டு வரவேண்டி யோசிக்கப்பட்டது. இருப்பினும், பெரும்பாலான இறப்பர் தோட்டங்கள் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட கிராமப்புறங்களில் அமைந்திருந்ததால், ஏராளமான இலங்கைத் தொழிலாளர்கள் தோட்டங்களில் சாதாரண வேலைகளைப் பெற்றனர். இறப்பர் உள்ளூர் தொழில்முனைவோரையும் ஈர்த்தது. 1920க்குப் பிறகு பல இறப்பர் நிறுவனங்கள் இலங்கையின் நிலவுடைமை வகுப்பினருக்குச் சொந்தமானது.

கோப்பியிலிருந்து தேயிலை வந்தபோதும் கூட, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் எவ்வித முன்னேற்றமும் இருக்கவில்லை. தேசிய பொருளாதாரம் தொடர்ச்சியாக ஏற்றுமதிமையப் பொருளாதாரமாகவே இருந்தது. உள்நாட்டுத் தன்னிறைவு பொருளாதாரம் குறித்து அக்கறைகாட்டப்படவில்லை. உள்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கையரும் (அரசியல நிர்வாகத் துறைகளில் இருந்தோர் குறிப்பாக) இதே ஏற்றுமதிப் பொருளாதார முறையையே விரும்பினர். அவர்களும் தேயிலைத் தோட்டங்களுக்கும் இறப்பர் தோட்டங்களுக்கும் முதலாளியாவதன் மூலம் தமது நலன்களைப் பேணமுண்டியடித்தனர்.




யூனியன் வங்கியின் தேசிய தொழில் முயற்சியாண்மை

# விருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

யூனியன் வங்கி தனது Union Bank School of Social Entrepreneurshipஇன் முக்கிய மைல்கல் சாதனையாக தேசிய தொழில் முயற்சியாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை (NEDP) அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளதுடன், மொரட்டுவ பல்கலைக்கழகம் (UoM) மற்றும் தேசிய புத்தாக்க முகவர் அமைப்பு (NIA) ஆகியவற்றுடன் இணைந்து யூனியன் வங்கி இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

2024 டிசெம்பர் மாதத்தில் நாடு முழுவதிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நிலையில், கிடைத்த விண்ணப்பங்களிலிருந்து இருநூறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், தற்போதைய வியாபார உரிமையாளர்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை கொண்ட தொழில் முயற்சியாளர்கள் போன்ற புத்தாக்கமான சிந்தனைகளை கொண்டவர்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், நிகழ்விலும் பங்கேற்றிருந்தனர்.

ஒன்லைன் விரிவுரைகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் போன்றன இணைந்து இந்த நிகழ்ச்சி முன்னெடுக்கப்படுவதுடன், வியாபார திரட்சியை கட்டியெழுப்ப அவசியமான பரந்த கற்கையை உள்வாங்கியுள்ளது. வியாபார உரிமையாளர்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைந்த தொழில்முயற்சியாளர்கள் போன்றவர்களின் திறன்களை மேம்படுத்தும் மாற்றியமைக்கும் பயணத்தின் ஆரம்பமாக இந்த மைல்கல் நிகழ்வு அமைந்திருந்தது. நிகழ்வின் முக்கிய அங்கமாக, யூனியன் வங்கியின் வாடிக்கையாளர்களும் நிகழ்வில் இணைந்து கொண்டதுடன், திட்டத்துக்கு பெருமளவு பெறுமதியை சேர்த்திருந்தனர். ஒன்றிணைந்து, தொழில்முயற்சியாண்மை, புத்தாக்கம் மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை இலங்கையில் கட்டியெழுப்புகின்றோம்.

யூனியன் வங்கியின் பிரதிநிதிகளுடன் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள், மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் தேசிய புத்தாக்க முகவர் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள், தேசிய தொழில் முயற்சியாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுக நிகழ்வில் காணப்படுகின்றனர்.

# SLT-MOBITELபுத்தாக்கத்துக்காக மூன்று விருதுகளை சுவீகரித்தது




இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, அண்மையில் நடைபெற்ற தேசிய சிறந்த தர தகவல் தொடர்பாடல் தொழினுட்ப விருதுகள் (NBQSA) 2024 வழங்கும் நிகழ்வில் மூன்று பெருமைக்குரிய விருதுகளை சுவீகரித்திருந்தது.

இந்நிகழ்வு கோட்டே, மொனார்ச் இம்பீரியலில் நடைபெற்றது.

SLT-MOBITEL'இன் விருதுகளை வென்ற செயற்திட்டங்கள் பல்வேறு துறைகளை முன்னேற்றுவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தன: தொழிற்துறை உற்பத்தி பிரிவில் 'SenseGrid IoT Solution'க்கு வெள்ளி விருது வழங்கப்பட்டது. The Embryo புத்தாக்க அணியினால் வடிவமைக்கப்பட்ட இந்தத் தீர்வு, உடனுக்குடன தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு போன்றவற்றினூடாக உற்பத்தி துறையின் உற்பத்தி செயன்முறையை சீராக்கி வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. Digital Projects அணியினால் வடிவமைக்கப்பட்ட 'Energen'க்கு, நிலைபேறாண்மை மற்றும் சூழல் பிரிவில் வெண்கல விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. வலு வினைத்திறனை ஊக்குவித்தல் மற்றும் தகவலறிந்த தீர்மானமெடுத்தல்களுக்கு வலுவூட்டல் போன்றவற்றில் சூழல்சார் சந்தேகங்களை தீர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. இறுதியாக, PeoplesHRஉடனான பங்காண்மையில் Enterprise Digital Products அணியினால் வடிவமைக்கப்பட்ட'AkazaHR', தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் பிரிவில் மெரிட் விருதை வென்றிருந்தது. மனித வளங்கள் முகாமைத்துவத்தை ஒழுங்கமைப்பதாக இந்தத் தீர்வு அமைந்திருப்பதுடன், ஒட்டு மொத்த ஊழியர் அனுபவத்தை மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

நிறுவனத்தின் சார்பாக, பிரதி பிரதம புத்தாக்க அதிகாரி எம்.ஐ.தீன், டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்திட்டங்கள் பொது முகாமையாளர் இஷாரி சிறிவர்தன, நிறுவனசார் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை தீர்வுகள் பொது முகாமையாளர் செல்வேந்திரன் வித்யாபன், டிஜிட்டல் லெப் பிரதி பொது முகாமையாளர் அசேல எரந்த, டிஜிட்டல் செயற்திட்டங்கள் பிரதி பொது முகாமையாளர் தினேஷ் பெரேரா, நிறுவனசார் டிஜிட்டல் தீர்வுகள் பிரதி பொது முகாமையாளர் தினுஷா ராஜபக்ஷ மற்றும் இதர சில SLT-MOBITEL அதிகாரிகளும் கலந்து கொண்டதுடன், NBQSA 2024இல் உரிய விருதுகளை பெற்றுக் கொண்டனர். இலங்கையின் பொருளாதார மற்றும் தொழில்னுட்ப மேம்படுத்தலுக்கு பங்களிப்பு வழங்கும் நவீன தீர்வுகளை வடிவமைப்பதற்கான SLT-MOBITEL ஒப்பற்ற அர்ப்பணிப்பை இந்த கௌரவிப்பு பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

கொமர்ஷல் வங்கியில் 25 வருடங்கள்

# சேவையாற்றியவர்கள் கௌரவிப்பு




கொமர்ஷல் வங்கி தனது வருடாந்த சிரேஷ்ட ஊழியர்களுக்கான விருது வழங்கும் விழாவில், 37 ஊழியர்களின் கடமையுணர்வையும் 25 வருட கால சேவையையும் கௌரவித்திருந்தது.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தவிசாளர் ஷர்ஹான் முஹ்சீன், வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க, பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்வில், கௌரவிக்கப்பட்ட ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த விருதுகளை பெற்றவர்களில் பலர் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்த நிலையில் 1999ஆம் ஆண்டு வங்கியில் இணைந்து கொண்டவர்கள் என்றும் தற்போது வங்கி மற்றும் வங்கிக் கிளைகளில் பல்வேறு துறைகளில் முக்கிய பதவிகளை வகிப்பதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபை மற்றும் கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பிரதிநிதிகளுடன் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட ஊழியர்களையும் படத்தில் காணலாம்.



# சாதனைப் பெண்கள்

மிக ஒடுக்கமான
ஒற்றையடிப் பாதையின் முடிவில்
உனது சிறிய குடிசை இருந்தது
மழையும் வெய்யிலும்
உள்ளே விளையாடும்
ஓட்டைக் கூரை
பொலித்தீனால் அடைக்கப்பட்ட
ஜன்னல் இடைவெளிகள்
கணவர் இறந்துபோன
இளவயதுடைய நீ
அரைகுறை உணவுடன்
படிக்கச் செல்லும் இரு பெண்
பிள்ளைகளின் தாய் நீ
குடும்பத்தின் பெண்தலைமை நீ
ஓடி ஓடி வீட்டு வேலைக்காரியாய்
உழைத்து தேய்ந்து போன
உடல் கொண்ட நீ
இன்னும் இறந்த கணவனை
மட்டுமே நினைத்து வாழும் நீ
நான்
ஏதோ எழுதியதற்காக
பொன்னாடை போர்த்தப்படுகிறேன்
இன்னும் விருதுகளுக்காக
ஒரு பெண் ஆளுமை எனப்
பெயர் சூட்டப்பட்டு
அழைக்கப்படுகிறேன்
உன்னைப் போன்ற
போற்றத்தகுந்தவர்களைப்
பார்த்தபின்
உன்னைப் போன்றோரை
அறிந்தும் அறியாது தவிர்த்த
சமூக அக்கறைகளை நினைத்தபின்
கூனிக் குறுகிப் போகிறது
என் உடல்
நீங்கள்தான்
வாழ்நாள் சாதனையாளர்கள்...
வாழ்த்தப்படத் தகுதியுடையவர்கள்...
என்று நான் உரத்துச் சொல்வேன்...
எப்போதும் அதை உறுதியாகச்
சொல்வேன்..!



– பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

# இயற்கை மகளுக்கு எறியப்பட்ட 'பூமராங்'

பருவந்தப்பிய கனமழை
பயங்கரமான காட்டுத் தீ
சுனாமி சுறாவழி மண்சரிவு
தொற்றும் தொற்றா நோய்கள் என
இயற்கையின் சீற்றத்துக்கு
ஈடுகொடுக்க முடியாது
நவீனங்களின் கையறுநிலை..!


இயற்கைச் சமநிலையை
எள்ளிநகையாடிய மனிதனின்
செயற்கை சீரழிவுகள்
ஏவிவிடப்பட்ட 'பூமராங்' என
கூடிய வீச்சுடன் திரும்பி
அவனது சந்ததிகளையே
தாக்கியழிக்க புயல் வேகத்தில்..!

காடழிப்பு எரிப்புக்கள்
கட்டறுந்த இரசாயனப்
பாவனைகள் நெகிழிகள்
குப்பைகளாகி குளம் குட்டைகள்
கடல் என தேங்கி வழிந்து
சமநிலையை சல்லடை போட்டபடி..!

மண் ஆசையுடன்
மமதைகொண்ட வல்லாதிக்கப் போட்டிகளால்
கொட்டும் மழைகளாக
குண்டுகளை வீசி அழிவுகளில்
பேரானந்தம் கொள்ளும்
பேராசையால்
அழிகிறது உலகம்
அவலப்பட்ட மக்கள் கூட்டம்
அகதிகளாக அவதிப்பட்டு எங்கோ
ஓடிக்கொண்டு உயிரைக் கையில் பிடித்தபடி..!

ஏனடா மனிதா இதற்காகவா
பூமியில் பிறப்பெடுத்தாய்...?
அற்பத்தனங்களை அறுதியெழுதிவிட்ட நீ..!
ஒட்டுமொத்தமாய் அழிந்துபோ என
இயற்கைமகள் சீற்றங்கொண்டாள்
அவளின்
ஊழிக்கால நர்த்தனம் ஆரம்பமாகி
நிறுத்தமுடியா சவாலாகியதால்
தடுமாறுகிறது உலகம்..!

– பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்







# முரண்

தேவர்கள் அசுரர்கள்
சூழாமல் கடலைக்
கடைதல் இலகுவாக இருக்கிறது.
கடைந்த கடலில்
கிடைத்த அமிர்தத்தை
எல்லோருக்கும் பகிர்ந்தளித்து
மிஞ்சிய துளியை
புழு சுருட்டிய
இலையொன்றில்
மறைத்தும் வைக்கிறேன்.

படியளர்ந்த நிலையென
கட்டியணைத்து முதுகில்
தடவி புகைப்படங்கள்
எடுத்து அமிர்தம் உண்டவர்கள்
போன பின்பு என்னை
இறுக பற்றியது சவுத்தகடல்.
கொன்றால் பாவம் தின்றால்
தீரும் வழக்கு மொழிதல்
பிரசன்னமாகி அவ்விடத்திலே
மறைந்து போக தெருவிற்கு
வந்த புதிய மீன் வியாபாரியாக
முகத்தை மாற்றியமைக்க
முயற்சித்துக் கொண்டிருந்தோம்
இருவரும்.



– காரையன் கதன்









# பரதநாட்டிய அரங்கேற்றம்




சண்முகராஜா-சுகந்தினி தம்பதியின் புதல்வியும், 'கலாசூரி ஆச்சார்ய கலா சாகர' விஷ்வ ரங்காபிமானய' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன் (இயக்குநர்- நாட்டிய கலா மந்திரின் மாணவியுமான சஹானா சண்முகராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றம், கொழும்பு - பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், கடந்த 19ஆம் திகதியன்று இடம்பெற்றது.


பிரதம விருந்தினராக 'எவர் கிரீன் ஸ்டார்' லைலா திரையுலக நடிகை (இந்தியா) மற்றும் நடன ஆசிரியை, றோயல் அகடமி, இலண்டன். பங்குபற்றினார்.

கௌரவ விருந்தினர்களாக முனைவர். ராதிகா வைரவேலவன் (பகுதிநேர நடன பேராசிரியர்-மதராஸ் பல்கலைக்கழகம், இயக்குநர்- சதுர் லக்ஷ்ணா அகாடமி ஆஃப் பைன் ஆர்ட்ஸ். ஆய்வுக் குழு உறுப்பினர்-அலையன்ஸ் பல்கலைக்கழகம். நடிகர் (திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி) அவரும்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் (சிலோன்) (பிரைவட்) லிமிடட்டின் நிர்வாக உறுப்பினர், எஸ்.குமார் நடேசன் ஆகியோர் பங்கேற்றனர். 'விஜய் டிவி புகழ்' நடிகர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், பேச்சாளர் (இந்தியா) 'ஈரோடு' மகேஷ், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.








அமெரிக்கா

சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க

# எல்லையில் இராணுவத்தினர் குவிப்பு



சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க அமெரிக்கா-மெக்சிகோ எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்கா-மெக்சிகோ எல்லைக்குக் கூடுதலாக 1,000 இராணுவ வீரர்களும்,

500 கடற்படையினரையும் அனுப்பத் தொடங்கியுள்ளதாக, பென்டகன் தெரிவித்துள்ளது.

இவர்கள் ஏற்கெனவே பணியில் உள்ள 2,500 வீரர்களுடன் இணைந்து எல்லையில் ரோந்து உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுவார்கள்.

மேலும் 5,000க்கும் மேற்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள புலம்பெயர்ந்தோரை நாடு கடத்துவதற்கான உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் விமானங்களுக்கு உதவ இராணுவ விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அனுப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

ஜன. 27க்கு பிறகு அகதிகள் வருகைக்கு

# தடை




அமெரிக்காவில், குடியேற அனுமதிக்கப்பட்ட அகதிகளின் பயணம் இரத்து செய்யப்படுவதாக, ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது..

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவில் அகதிகள் குடியேற்றத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.

அதன்படி, எதிர்வரும் 27ஆம் திகதிக்குப் பிறகு, அகதிகள் வருகைக்குத் தடைவிதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலக்கெடுவுக்கு முன்னதாக அமெரிக்காவுக்குள் நுழைய முறையான அனுமதிப் பெற்ற அகதிகள் அமெரிக்கா செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட அகதிகளின் பயணத்தை ட்ரம்ப் நிர்வாகம் இரத்து செய்துள்ளது.



அமெரிக்கா

லோஸ் ஏஞ்சல்ஸில் மீண்டும் காட்டுத் தீ

# 31 ஆயிரம் பேரை வெளியேறுமாறு உத்தரவு

அமெரிக்காவின் லோஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் மீண்டும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதால் பல்லாயிரக் கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதே பகுதியில் , அண்மையில், இரண்டு மிகப்பெரிய காட்டுத்தீ சம்பவங்கள் அரங்கேறிய நிலையில், தற்போது மீண்டும் காட்டுத்தீ பரவி வருவது பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

காஸ்டாயிக் ஏரியின் அருகில் உள்ள மலைப்பகுதியில் வேகமாகப் பரவிய காட்டுத்தீ கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்குள் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

பலத்த காற்று காட்டுத்தீயின் தீவிரத்தை அதிகப்படுத்த, அந்தப் பகுதி முழுக்க புகை சூழ்ந்து காணப்பட்டது. மேலும், தீ அதிக இடங்களுக்குப் பரவும் என்று தெரிய வருகின்றது.

ஹியூஸ் தீ என்று அழைக்கப்படும் இந்த புதிய காட்டுத்தீ காரணமாக, சாண்டா கிளாரிட்டா அருகில் அமைந்துள்ள ஏரியைச் சுற்றி வசிக்கும் 31 ஆயிரம் பேரை வெளியேற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியா

# மகா கும்பமேளா படங்களை வெளியிட்ட 'இஸ்ரோ'

விண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மகா கும்பமேளா நடைபெறும் இடத்தின் புகைப்படங்களை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) வெளியிட்டுள்ளது.

மகா கும்பமேளா நடைபெறும் திரிவேணி சங்கமம் இதற்கு முன்பு எப்படி இருந்தது, தற்போது எப்படி உள்ளது என்பது தொடர்பான புகைப்படங்களை இஸ்ரோ விண்ணிலிருந்து எடுத்து வெளியிட்டுள்ளது.

இஸ்ரோவின் வெவ்வேறு செயற்கைக்கோள்கள் மூலம் இந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.


கடந்த 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி, டிசெம்பர் 22ஆம் திகதி, 2025ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆகிய திகதிகளில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஒன்றாக இணைத்து இஸ்ரோவால் வெளியிடப்பட்டுள்ளன.

விண்ணிலிருந்து எடுக்கப்பட்டாலும், திரிவேணி சங்கமத்தில் ஏராளமான மக்கள் கூடியிருப்பது போன்ற புகைப்படங்கள், ஏராளமான கூடாரங்களை அமைத்திருக்கும் படம், வாகன வசதி நிறுத்த புகைப்படம் ஆகியவை தெளிவாக அமைந்துள்ளன.

பழைய திகதிகளில் எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் இந்த கூடாரங்கள், ஏராளமான மக்கள் கூட்டம் இல்லை.

மேலும், மகா கும்பமேளாவுக்காக உருவாக்கப்பட்ட புதிய 'சிவாலயா' பூங்காவும், விண்ணிலிருந்து இஸ்ரோவால் புகைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது.





மகாராஷ்டிரா

# ரயிலில் மோதி 12 பேர் பலி

ரயிலில் தீ விபத்து என புரளி ஏற்பட்டதைத் தொடர்ந்து, தண்டவாளத்தில் குதித்த 12 பயணிகள் எக்ஸ்பிரஸ் ரயில் மோதி உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம், ஜல்காவ்ன் மாவட்டம், மஹேஹஜி-பார்த் ஹடே ரயில் நிலையங்களுக்கு இடையே, புதன்கிழமை (22) மாலை 5 மணியளவில் லக்னோ-மும்பை புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந்தது.

அப்போது, ரயிலில் தீப் பிடித்து விட்டது என யாரோ புரளியைக் கிளப்பியுள்ளனர். இதையடுத்து, பயணிகள் சிலர் அபாயச் சங்கிலியைப் பிடித்து ரயிலை நிறுத்தியுள்ளனர். ரயிலில் தீ விபத்து ஏற்பட்டுவிட்டது என்ற பயத்தால், ரயிலிலிருந்த பயணிகள் அலறிக் கொண்டு கீழே இறங்கியுள்ளனர். சில பயணிகள் அருகில் இருந்த தண்டவாளம் வழியாக ஓட முயன்றுள்ளனர். அப்போது, அந்த தண்டவாளத்தில் வந்த பெங்களூரு-டெல்லி கர்நாடகா எக்ஸ்பிரஸ் ரயில், பயணிகள் மீது மோதியுள்ளது.

இதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மராட்டிய முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ், உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு மாநில அரசு சார்பில் 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றார்.




முதலாவது போட்டியில்

# இங்கிலாந்தை வீழ்த்திய இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொல்கத்தாவில் புதன்கிழமை (22) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் சூரியகுமார் யாதவ் தமதணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, அர்ஷ்டீப் சிங் (2), வருண் சக்கரவர்த்தி (3), ஹர்திக் பாண்டியா (2), அக்ஸர் பட்டேலிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 132 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஜொஸ் பட்லர் 68 (44) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 133 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, அபிஷேக் ஷர்மாவின் 79 (34) ஓட்டங்களோடு 12.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஜொஃப்ரா ஆர்ச்சர் 4-0-21-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக வருண் சக்கரவர்த்தி தெரிவானார்.

மருதமுனை மசூர் மௌலானா மைதானத்துக்கு

# மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள்



ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்திற்கு 16 மில்லியன் ரூபாய் செலவில் மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த மைதானத்துக்கு நவீன மின்னொளியை பொருத்தித் தருமாறு பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்களின் பிரதிநிதிகள் என பலரும் நீண்ட காலமாக பிராந்திய அரசியல் தலைவர்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில், குறித்த மைதானத்துக்கு மின்னொளி பொருத்துவதற்கு என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ். எம்.எம்.முஷாரப் முதுநபீன் 2 மில்லியன் ரூபாய் நிதியை முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்திருந்தார். பின்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம்.ஹரீஸ் 14 மில்லியன் ரூபாய் நிதியை குறித்த மைதானத்தில் மின்னொளி பொருத்தி நவீன மைதானமாக புனரமைப்பு செய்வதற்கு என ஒதுக்கீடு செய்திருந்தார்.

இந்த வேலை திட்டத்தை கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை முன்னெடுத்தன. இவர்களின் அனுமதிக்கு அமைய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பொறுப்பளிக்கப்பட்டு தற்போது அதி நவீன மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நவீன மின்கம்பங்களைக் கொண்டு நீண்ட கால பயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என பிரதேச விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்து வந்தனர்.




# றஷ்ஃபோர்ட்டின் பிரதிநிதிகளுடன் பார்சிலோனா பேச்சு?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான மார்க்கஸ் றஷ்ஃபோர்ட்டின் பிரதிநிதிகளுடன் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுக்கு செல்வது குறித்து பார்சிலோனா நேருக்கு நேர் பேச்சுக்களை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

றஷ்ஃபோர்ட்டை அணியில் யுனைட்டெட்டின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ருபென் அமோரிம் உள்வாங்காத நிலையில் அவரை ஏனைய அணிகள் கைச்சாத்திடக்கூடியதாகவுள்ள நிலையில், அவரைக் கடனடிப்படையில் கைச்சாத்திடும் அணியை அவரின் ஊதியத்தின் ஒரு பகுதியை செலுத்த யுனைட்டெட் வேண்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பியன்ஸ் லீக்

# பெய்னூர்ட்டிடம் தோற்ற மியூனிச்

## பரிஸ் ஸா ஜெர்மைனிடம் தோற்ற சிற்றி



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், நெதர்லாந்துக் கழகமான பெய்னூர்ட்டின் மைதானத்தில் வியாழக்கிழமை (23) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் தோற்றது.

பெய்னூர்ட் சார்பாக, சன்டியாகோ ஜிமெனெஸ் இரண்டு கோல்களையும், அயஸே உயெடா ஒரு கோலையும் பெற்றனர். இதேவேளை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 24, ஜனவரி 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.